வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 03.03.2025 திங்கட்கிழமை | இதழ் : 62 | பக்கங்கள் : 12




## பௌத்த மறுமலர்ச்சியை உருவாக்க நடவடிக்கை!

### மகாநாயக்க தேரர்கள் முன்னிலையில் ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

கண்டி, மார்ச் 03

**பௌத்த மறுமலர்ச்சியை உருவாக்க தாம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக மகா நாயக்க தேரர்கள் முன்னிலையில் ஜனாதிபதி அநுர குமார தெரிவித்துள்ளார்.**

கண்டி தலதா மாளிகையில் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 10 நாட்கள் பொதுமக்களுக் கான விசேட தலதா கண்காட்சி நடைபெறவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில், ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

மேலும், தங்கள்



வாழ்வில் எப்போதாவது ஒருநாள் தலதா மாளிகையை வழிபட வேண்டும் என்பது இந்த நாட்டின் பௌத்த மக்களின் எதிர்பார்ப்பாகும். நாட்டில் இழந்து வரும் நாகரிகத்தை

11

## உள்ளூராட்சி தேர்தல் திகதி இந்த வாரம் அறிவிக்கப்படும்

### தேர்தல்கள் ஆணையாளர்

கொழும்பு, மார்ச் 03

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி இந்த வார இறுதிக்குள் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மிக விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைகுழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க அண்மையில் கூறியிருந்தார்.

அத்துடன், 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகசெலுத்தப்பட்ட கட்டுப்பணத்தை விரைவில் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட துணை மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## மின்சார கட்டணம் ஜூனில் திருத்தம்!

கொழும்பு, மார்ச் 03

நாட்டில் நிலவும் வறட்சி காலநிலை, எரிபொருள் அடிப்படையிலான மின்சார உற்பத்தியின் அளவை பொறுத்து ஜூன் மாதம் மின்சார கட்டணத்தில் திருத்தம் செய்யப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின்

11

## சீ. வீ. கே. சிவஞானத்திடமிருந்து எந்த கடிதமும் கிடைக்கவில்லை

### சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 03

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அனுப்பினார் என்று கூறப்படும் எந்தவொரு கடிதமும் எமக்குக் கிடைக்கவில்லை என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.) தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்", என்று தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அனுப்பினார் என்று கூறப்படும் விடயம் தொடர்பில் அவரிடம் கேட்ட போதே

11

## பாதாள குழுக்களின் செயல்பாட்டுக்கான ஆரம்பம் மக்கள் விடுதலை முன்னணியே

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 03

பாதாள குழுக்களின் செயல்பாட்டுக்கான ஆரம்பத்தை மக்கள் விடுதலை முன்னணியே ஆரம்பித்து வைத்தது - இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், எரிபொருள் கையிருப்பில் எவ்வித நெருக்கடியும் தற்போது ஏற்படவில்லை. எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டால் எரிபொருள்

11

## தேர்தலை அணுகுவது குறித்து ஏனைய கட்சிகளுடன் பேச்சு!

### சுமந்திரன் சொல்கிறார்

மன்னார், மார்ச் 03

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அணுகுவது தொடர்பில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கலந்துரையாடப்படுவதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக நேற்றைய தினம் மன்னாரில் தமிழ் அரசுக் கட்சியினரை

11



## மணல் கடத்திய டிப்பர்மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் காயம் - மற்றொருவர் தப்பியோட்டம்!

வடமராட்சி, மார்ச் 03

பருத்தித்துறையில் மணல் கடத்திச் சென்ற டிப்பர் வாகனத்தின்மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதில், ஒருவர் காயமடைந்தார். மற்றொருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது,

11

## 3 சதவீத கழிவு இரத்து; முடிவில் மாற்றமில்லை!

### அமைச்சர் நளிந்த அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 03

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் 3 சதவீத கழிவை இரத்து செய்யும் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாட்டில் நாளொன்றுக்குத் தேவைப்படும் அளவை விடவும் இரண்டு

11

## சிறப்புரிமையை பயன்படுத்தி பொய் கூறுவதற்கு இடமில்லை

### நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 03

பாராளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையில் பொய் சொல்வதற்கு உள்ள உரிமையை நீக்கக் கோரி தனிப்பட்ட முறையில் யோசனை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

11

## இந்தியா - இலங்கை கூட்டு பணிக்குழு கூட்டம் விரைவில்!

### பா. ஜ. க. தமிழ்நாடு தலைவர்

சென்னை, மார்ச் 03

மீனவர் பிரச்னை தொடர்பாக இந்தியா - இலங்கை கூட்டு பணிக்குழு கூட்டம் விரைவில் நடைபெறும் என பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் நேற்று நிகழ்வு ஒன்றின்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை படுகொலை: ஊடக வெளியீடு நடைபெற்றது!




வடமராட்சி, மார்ச் 03
'வல்வெட்டித்துறை : ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்' என்ற ஊடக வெளியீடும் சந்திப்பும் நேற்று ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்றது.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டத்தால் வெளியிடப்பட்ட இந்த ஊடக வெளியீடு இந்திய இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளில் பாதிக்கப்பட்ட பொது மக்களால் வெளியீடு செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில்நடைபெற்ற இந்த நிகழ்வில் அகவணக்கம், பொதுச்சுடர் ஏற்றல், மலர் அஞ்சலியை தொடர்ந்து வரவேற்புரையை மூத்த ஊடகவியலாளர் தி. எஸ் தில்லைநாதன் நிகழ்த்தியிருந்தார்.

அதனைத்தொடர்ந்து வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு சோ. தண்டாயுதபாணி தேசிகர், யாழ். மறை மாவட்டத்தின் மூத்த குருவும் முன்னாள் ஊறணி மயிலிட்டி பங்குத்தந்தையும் லண்டன் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தின் இயக்குநருமான அருட்தந்தை தேவராஜன் அடிகள் ஆகியோர் அஞ்சலி உரையை ஆற்றினர்.

தொடக்க உரையை வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு செயலாளர் ந. அனந்தராஜ் ஆற்றினார். அதன் பின்னர் ஊடக வெளியீடு அறிமுகமும் பிரதிகள் வழங்கலும் நடைபெற்றன. தொடர்ந்து சிறப்புரைகளை மனித உரிமைகள் செயல்பாட்டாளர் பிறிட்டோ பெர்னான்டோ, வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு தலைவர் ச. செல்வேந்திரா ஆகியோர் ஆற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ-02-05)

உள்ளூராட்சி மன்ற தேர்தல்:

# தமிழ் மக்கள் கூட்டணி தனித்தே போட்டியிடும்

யாழ்ப்பாணம், மார்ச் 03
எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி தனித்து தனது மான் சின்னத்தில் போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் சார்பில் சட்டத்தரணி வி. மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி அண்மையில் 9 கட்சிகளின் கூட்டணியை அமைப்பதற்காக பேச்சு நடத்தியது. இரண்டு பேச்சுகளில் பங்கேற்ற பின்னர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய தமிழ் கட்சிகளை மீண்டும் இணைக்க தாம் முயற்சிப்பதாக தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

## பூநகரியில் சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 03
கிளிநொச்சியில் வழிப்பறியில் ஈடுபட்ட இருவரை மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று முன்தினம் பரந்தன் - பூநகரி வீதியில் தம்பிராய் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பூநகரியை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தனது வியாபார நடவடிக்கையை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார். முகமூடியணிந்த இருவர் அவரை மறித்து அவரிடமிருந்த கைபேசி, பணப் பை என்பவற்றை பறித்துக் கொண்டு தப்பிச் செல்ல முயன்றனர்.

வீதியில் பயணித்தவர்களிடம் வர்த்தகர் உதவி கேட்ட நிலையில், தப்பிச் சென்றவர்களை பொது மக்கள் மடக்கிப் பிடித்தனர். மடக்கிப் பிடிக்கப்பட்டவர்கள் பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)

# 40 குடும்பங்களுக்கு இராணுவம் உதவி!

கிளிநொச்சி, மார்ச் 03
இத்தாவிலை சேர்ந்த உதவி தேவைப்படும் 40 குடும்பங்களுக்கு மெத்தைகள், தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இராணுவத்தின் 52 ஆவது படைப் பிரிவின் 23ஆவது கெமுனு வோட்ச் படையணி இந்த உதவித் திட்டங்களை வழங்கியது.

வேம்போடுகேணி சி.சி.த.க வித்தியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், முகமாலை, கிளாலி, வேம்போடுகேணி, இத்தாவில் பிரதேசங்களை சேர்ந்த 40 குடும்பங்களுக்கு மெத்தைகள், தென்னங்கன்றுகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக 52வது படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் வி. டி. எஸ். பெரேரா கலந்து கொண்டார். (ஐ)



# சுன்னாகவாசி உட்பட மூவர் ஹெரோயின், வாளுடன் கைது!

கல்முனை, மார்ச் 3
ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் இரண்டு வாள்களுடன் கைதான மூவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களில் ஒருவர் சுன்னாகத்தை சேர்ந்தவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை - அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடிவேம்பு தனியார் விடுதியில் கடந்த 25 ஆம் திகதி இரவு ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் இரண்டு வாள்களுடன் அக்கரைப்பற்று பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது அட்டாளைச்சேனை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரும் யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரும் அட்டாளைச்சேனை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பெண்ணும் கைது செய்யப்பட்டதுடன் கைதான ஒரு சந்தேக நபரிடமிருந்து 30 கிராம் 70 மில்லிகிராம் ஹெரோயினும் மற்றும் இரண்டு வாள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இவர்களை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்திய போது பெண்ணை விளக்க மறியலிலும் ஏனைய இரு சந்தேக நபர்களை 03 நாட்களுக்கு தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தார். இதற்கமைய சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பெண்ணின் மரணத்தில் சந்தேகம் மீண்டும் விசாரணைகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 03
தீயில் எரிந்து உயிரிழந்த சாவகச்சேரி பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் தமிழினி சதீஸின் மரணம் தொடர்பில் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தனது மகளின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து அவரின் தந்தை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டுக்கு அமையவே மீண்டும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழினி சதீஸ் கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி தீயில் எரிந்து உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யோகக்கலை கற்கைநெறி

யாழ்ப்பாணம், மார்ச் 03
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக் கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களை கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# தேவாலயத்தில் உண்டியல் களவு

யாழ்ப்பாணம், மார்ச் 03
வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பிலிப்புநேரியார் தேவாலயத்தில் உண்டியல் நேற்று முன்தினம் இரவு உண்டியல் திருடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுக் காலை தேவாலயத்துக்கு வழிபாட்டுக்காக சென்ற மக்கள் குறித்த காணிக்கை உண்டியல் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் பங்குத்தந்தை மற்றும் ஆலய அருட்பணி சபையினருக்குத் தெரியப் படுத்தப்பட்டது. (எ-05)

# 128 கிலோ கஞ்சாவுடன் மாதகலில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச். 03
125 கிலோ கேரள கஞ்சாவுடன் மாதகலில் ஒருவரை இளவாலை பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நடத்திய சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மாதகலைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.03.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜெனிவாவை நம்புதல்

பொதுவாக மார்ச் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் ஜெனிவா என்னும் சொல் ஈழத் தமிழர் அரசியலில் முகம் காண்பிப்பதுண்டு. ஜெனிவாவை ஓர் இராஜதந்திர மேடையாகப் பயன்படுத்துவதாகவே கடந்த பதினைந்து வருடங்களாக தமிழ் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளாகத் தங்களை அடையாளப்படுத்துபவர்களும் கூறி வந்திருக்கின்றனர். வெளிநாட்டு கொடை நிறுவனங்களின் நிதியில் மனித உரிமைகள், நிலைமாறுகால நீதி என்னும் பெயரில் இலவச சுற்றுலா சென்றவர்களும் அதிகம்.

ஆனால், கடந்த பதினைந்து வருடங்களில் ஜெனிவா என்னும் மேடையைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட நன்மைகள் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜெனிவாவில் பிரேரணைகள் முன்வைக்கப்படுவதும் - அது தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுவதும் - ஆனால், அரசாங்கமோ வழமைபோல் வெளிநாட்டு தலையீடுகளை அனுமதிக்க முடியாது என்று கூறுவதாகவுமே இந்த நிலைமை தொடர்கிறது. அரசாங்கம், ஜெனிவாவை இலகுவில் கையாளக்கூடிய ஒரு மேடையாகவே கருதுகிறது. அரசாங்கம் அவ்வாறு கருதுவதற்கு ஏற்றவாறுதான் சர்வதேச அரசியல் சூழலும் இருக்கிறது.

2012இல் அப்போதைய ஜனாதிபதி ஒபாமா தலைமையிலான அமெரிக்க நிர்வாகமே இலங்கையின் பொறுப்புக்கூறலை ஜெனிவா மயப்படுத்தியது. அப்போது, அமெரிக்க இராஜாங்கச் செயலாக இருந்த ஹிலாரி கிளின்ரன் இலங்கைமீதான பொறுப்புக்கூறல் பிரேரணையில் பிரத்தியேக ஈடுபாட்டைக் காண்பித்திருந்தார். இதற்கு ஒரு காரணம் இருந்தது. மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை அகற்றுவதில் அப்போதைய அமெரிக்க நிர்வாகம் ஆர்வம் காண்பித்திருந்தது. ராஜபக்ஷவின் சீன சார்பே இதற்கான அடிப்படையான காரணம். ஒருவேளை, ராஜபக்ஷக்கள் சீன சார்புக்குள் விழாது போயிருந்தால் அமெரிக்காவின் அணுகுமுறையும் வேறு விதமாக இருந்திருக்கலாம்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் 2015இல் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டது. அந்த ஆட்சி மாற்றத்துக்கு ஒரு நிரந்தரமான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் அமெரிக்கா ஆர்வம் காண்பித்தது. அமெரிக்காவின் ஆசிய மையக் கொள்கையின் ஓர் அங்கமாகவே அது இடம்பெற்றிருந்தது. ஹிலாரியின் பார்வையில், அமெரிக்காவின் தலைமைத்துவத்துக்காக ஆசியா ஏங்கிக் கொண்டிருந்தது. அமெரிக்காவின் முன்னணி சிந்தனைக்கூடமான ஈஸ்ட் - வெஸ்ட் நிலையத்தில் "அமெரிக்காவின் பசுபிக் நூற்றாண்டு" என்னும் தலைப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்படி கருத்தை வலியுறுத்தியிருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தை ஜெனிவா மயப்படுத்தும் விடயத்துக்கு அமெரிக்கா தலைமை தாங்கியது. ஒபாமாவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில், இராஜாங்கச் செயலராக இருந்த ஜோன் ஹெறி கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். மேற்குலகு சார்பான ரணில் - மைத்திரி அரசாங்கம் அமெரிக்காவால் முன்கொண்டுவரப்பட்ட பொறுப்புக்கூறல் விடயத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கைக்கொண்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஆனால், அரசாங்கம் குறிப்பிட்டவாறு விடயங்களில் முன்னேற்றம் ஏற்படவில்லை. அதேவேளை மேற்குலகு சார்பான ஆட்சியையும் தொடர முடியவில்லை. ஆட்சி மாற்றத்தின் மீதான அமெரிக்க அணுகுமுறை தோல்வியடைந்தது என்றே கூறலாம்.

இன்றைய நிலைமையோ இன்னும் சிக்கலடைந்திருக்கிறது. தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்றிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீண்டும் உள்நாட்டு பொறிமுறையையே ஜெனிவாவில் வலியுறுத்தியிருக்கிறது. உலக அரசியல் நிலைமைகளில் இலங்கையின் மனித உரிமைகள்மீது அதிக ஆர்வம் காண்பிப்பதற்கு இப்போது எவரும் இல்லை. உதட்டளவு அழுத்தமாகவே ஜெனிவாவின் கருத்துகள் இருக்கப்போகின்றன. ஒரு வகையில் ஜெனிவா மேடைதான் "மெல்லுவதற்கு அவல் கிடைத்த கதைபோல்..." இலங்கை விடயம் உச்சரிக்கப்படும். ஆனால், அதனை பயன்படுத்தி ஈழத் தமிழர் அரசியலை முன்னகர்த்த முடியாது. ஈழத் தமிழர் தங்களுக்கான மேடை எங்குள்ளது என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

# பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர் எண்ணிக்கையை குறைக்க அரசு நடவடிக்கை

## அமைச்சர் சரோஜா தெரிவிப்பு



வவுனியா, மார்ச்.03

பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் அரசாங்கம் செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக மகளிர், சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள சிறுவர் இல்லங்களை பார்வையிட்டமை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் என்பனவற்றுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 500 மில்லியன் ரூபாய் இதன் வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும், மனித வளத்தை மேம்படுத்துவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அபிவிருத்திக்காகவும், அவர்களுக்கான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் மாணவர்களுக்கான 6000 ரூபாய் கொடுப்பனவு, காலணி வவுச்சர், பாடநூல், சீருடை, பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் பயன்படுத்தும் அங்கி என்பன வழங்கப்பட்டுள்ளன. இனி பாடசாலையில் இருந்து பொருளாதார சுமை காரணமாக இடைவிலக முடியாத வகையில் அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமருடனும் இது தொடர்பில் பேசியுள்ளோம்.

இடைவிலகளுக்கு பின் சிறுவயது திருமணங்கள், சிறு வயது விவாகரத்து தொடர்பிலும் கவனம் செலுத்தி அவர்களுக்கான ஒரு கல்வியை வழங்குவது தொடர்பிலும் ஆலோசித்து வருகின்றோம்" - என்றார்.

(எ-10)

# 200,000 சுற்றுலாவிகள் பெப்ரவரியில் வருகை!

கொழும்பு, மார்ச் 03


கடந்த மாதத்தில் மாத்திரம் 2 இலட்சத்து 32 ஆயிரத்து 341 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 34 ஆயிரத்து 6 பேரும் ரஷ்யாவில் இருந்து 29 ஆயிரத்து 241 பேரும் பிரித்தானியாவில் இருந்து 24 ஆயிரத்து 830 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, இந்த வருடத்தின் கடந்த மாதம் வரை 4 இலட்சத்து 85 ஆயிரத்து 102 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

(ஐ)

# 500,000 போதை மாத்திரைகளுடன் நீர்கொழும்பில் ஒருவர் கைது!



கொழும்பு, மார்ச் 03

நீர்கொழும்பில் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கை யில் 5 இலட்சம் போதை மாத்திரைகளுடன் மன்னாரைச் சேர்ந்தவர் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் நடத்திய திடீர் சுற்றிவளைப்பிலேயே இவர் கள் கைது செய்யப்பட்டனர்.


கைதானவர் மன்னாரை சேர்ந்த 30 வயது நபராவார்.

இது தொடர்பான மேல திக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். முன்னேறும் நாள்.

**இடபம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வாகன வசதிப் பெருகும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**மிதுனம்**
உங்களின் அணுகு முறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**கடகம்**
கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது. நயமாகப் பேசுபவர்களை நம்பவேண்டாம்.

**கன்னி**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**துலாம்**
விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் அடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**விருட்சிகம்**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். தாயார் உடல்நிலை சீராகும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
கலைப் பொருட்கள் வாங்கு வீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. புது வேலை அமையும்.

**மகரம்**
சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். புது வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தின் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். யாரையும் யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும்.

# 1600 போதை மாத்திரைகளுடன் யாழில் இரு இளைஞர்கள் கைது



யாழ்ப்பாணம், மார்ச்.03

யாழ்ப்பாணம், சுதுமலையில் 1600 போதை மாத்திரைகளுடன் இருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுக்காலை கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலகவின் வழிகாட்டுதலில் சுதுமலை பகுதிக்கு விரைந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரை வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, 1600 போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து போதை மாத்தி ரைகளை வைத்திருந்த கொக்கு வில் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய நபரும், ஆனைக் கோட்டை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# வவுனியா நகர்ப்பகுதி வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் தொல்லை

## கட்டுப்படுத்த யாரும் இல்லை - மக்கள் விசனம்

வவுனியா, மார்ச்.03

வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதி மற்றும் ஏ - 9 வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதுடன், இதனைக் கட்டுப்படுத்த நகர சபை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக நகரைச் சூழ பல பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்கள் காணப்படுகின்றன.

இந்த நிலையில், கல்வி நடவடிக்கைகளுக்காக இந்த வீதிகளைப் பயன்படுத்தும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய பல்வேறு தேவைகளுக்காக பயணிப்போர் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

அத்துடன், கட்டாக்காலி மாடுகளால் விபத்துக்குள்ளாகும் நிலையும் அண்மைய நாட்களாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.


இது குறித்து கால்நடைகளை பராமரிப்பவர்கள் கவனம் செலுத்த வேண்டும். அல்லது வவுனியா நகர சபையானது கால்நடைகள் பராமரிப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கூறினர்.

இது தொடர்பில் வவுனியா நகர சபை செயலாளர் பால கிருபனிடம் கேட்டபோது,

“கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப் பாக வருட ஆரம்பத்திலும் நகரில் கட்டாக்காலியாக திரிந்த 70 மாடுகள் பிடிக்கப் பட்டதுடன் அந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு தண்டப் பணமும் அறவிடப்பட்டி ருந்தது”- என்றார். (எ-10)

# விக்டர் ஐவனுக்கு யாழில் அஞ்சலி





யாழ்ப்பாணம், மார்ச் 03

ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனுக்கான அஞ்சலிக் கூட்டம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். ஊடக அமையத்தின் அனுசரணையில் நேற்று நடைபெற்றது.

காந்தி சேவா சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் வரவேற்புரையை காந்தீயம் ஆசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தியும் அஞ்சலி உரைகளை சிரேஷ்ட ஊடவியலாளர்களான ந. பரமேஸ்வரன், ந. கணேசமூர்த்தி, யாழ். ஊடக அமையத் தலைவர் செல்வகுமார் மற்றும் மூத்த காந்தியவாதியும் விக்டர் ஐவனின் நண்பருமான சோ.க. தம்பிப்பிள்ளையும் ஆற்றினர்.

இலங்கை ஊடகங்களில் முக்கிய நபராக விளங்கிய சிங்கள மொழிப் பத்திரிகையாளரான ஒருவருக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்துவது முக்கிய நிகழ்வாகும். ராவய பத்திரிகையில் 25 வருடங்கள் பணியாற்றிய விக்டர் ஐவன், வன்முறைகளால் வடக்கில் தமிழரும் தெற்கில் சிங்களவரும் பாதிக்கப்பட்டதை மனித நேய உணர்வோடு வெளிப்படுத்திய ஒருவர். இடதுசாரி கருத்துகளால் ஆரம்பத்தில் ஈர்க்கப்பட்டிருந்தாலும் பின்னர் மகாத்மா காந்தியின் அகிம்சை தத்துவத்தை தீவிரமாக பின்பற்றத் தொடங்கிய சமூக ஆர்வலராக விளங்கிய ஒருவர் என்று காந்தீயம் ஆசிரியர் தனதுரையில் குறிப்பிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 ஆயிரம் கிலோ நெல்லையே அரசு கொள்வனவு செய்துள்ளது

கொழும்பு, மார்ச் 03

**அரச நெல் சந்தைப்படுத்தல் சபை 16 தொன் நெல்லையே இதுவரை கொள்வனவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

எதிர்வரும் காலங்களில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையிலும் அரிசியை கட்டுப்பாட்டு விலையில் சந்தையில் விற்பனை செய்யும் நோக்குடனும் நெல் சந்தைப்படுத்தல் சபை இம்முறை கூடுதலான நெல்லை கொள்வனவு செய்ய தீர்மானித்திருந்தது.

பெரும்போக விளைச்சலின் அறுவடை நடவடிக்கைகள் நிறைவடையும் நிலையில் இதுவரை 16 ஆயிரத்து 336 கிலோ நெல் மட்டுமே சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்ய முடிந்துள்ளது.

ஒரு கிலோ நெல்லுக்கு அரசாங்கம் 120 ரூபாயை நிர்ணயித்தது. தனியார் வர்த்தகர்கள் அதனை 125 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.

இதனால் விவசாயிகள் தனியார் வர்த்தகர்களை நாடும் நிலை அதிகரித்துள்ளதாகவும் இது அரசாங்கத்துக்கு பெரும் தோல்வியை தந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# ரூ. 16,700 கோடி பெறுமதியான திறைசேரி உண்டியல் ஏலம்!

கொழும்பு, மார்ச் 03

16 ஆயிரத்து 700 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை மறுதினம் ஏல விற்பனை ஊடாக விற்கனப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 8 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 6 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை ஊடாக விற்பனை செய்யப்படவுள்ளன. (ஐ)

# தென்னக்கோனுக்கு வெளிநாட்டு பயண தடை!

கொழும்பு, மார்ச் 02

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இவ்வாறு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2023 டிசெம்பர் 31ஆம் திகதி மாத்தறை - பெலேன பகுதியிலுள்ள ஹோட்டல் அருகே நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைய அவரை கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி அன்ஸ்லம் டி சில்வா உள்ளிட்ட 6 சந்தேகநபர்களை கைது செய்வதற்கு நீதிமன்றத்தால் உத்தர விடப்பட்டிருந்தது.

கொலை சதி செய்த குற்றச்சாட்டின் கீழ் அவர்களை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எரிபொருள் விலையுயர்வுக்கு பதிலாக விநியோகஸ்தர்களின் கழிவு நீக்கம்!

## முன்னாள் அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 03

அரசாங்கம் மக்களுக்கு வழங்கும் எரிபொருள் விலையை அதிகரிக்க முடியாமல் எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கும் கழிவை நீக்குவதற்கு முயற்சிக்கிறது என்று முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

"3 வீதத்தை நீக்குவதெனில் மக்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் விலை குறைக்கப்பட வேண்டும். ஒரு லீற்றர் எரிபொருள் விலையை 9 ரூபாயால் குறைத்திருக்க வேண்டும். இங்கும் பொய்தானே கூறுகிறார்கள். இந்தப் பொய்யை நிறுத் துங்கள். இந்த நாட்டு மக்கள் எருமை மாடுகள் என நினைத்தீர்களா? மக்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் விலையை அதிகரிக்க முடியாமல் அந்த எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் தொகையையும் கொள்ளையடிக்கத்தான் பார்க்கிறார்கள்.

மூளையால் வேலை செய்ய வேண்டியதை உடலால் செய்ய முடியாதுதானே. மூளையால் வேலை செய்ய திசைக்காட்டி அரசாங்கம் ஆட்சிக்கு வரவில்லையே.

150 ரூபாய்க்கு எரிபொருள் வழங்கத்தானே வந்தது. நாட்டை இப்படி இழுத்துச் செல்வதற்கு ஜனாதிபதியின் பேச்சாற்றலே காரணம். பேச்சால் ஒரு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்பதைப் புரிந்து கொண்டால் சரி." - என்றார். (ஐ)

# போத்தல் மூடிகளுக்குள் மறைத்து போதைப்பொருள் விற்றவர் கைது!

கொழும்பு, மார்ச் 03

குளிர்பான போத்தல் மூடிகளுக்குள் போதைப் பொருளை மறைத்து வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - கெக்கிராவை - மரதன்கடவலை பிரதேசத்திலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

ஒன்லைன் விற்பனை மூலம் போதைப் பொருள் விற்பனையில் குறித்த நபர் ஈடுபட்டு வந்துள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபரிடம் இருந்து 104 பைக்கெற்றுகளுக்குள் அடைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர் குளிர்பான போத்தல் மூடிகளுக்குள் குறித்த போதைப் பொருளை மறைத்துவைத்திருந்துள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 5.25 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை கெக்கிராவை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பதுளையில் மண் சரிவு இரண்டு வீடுகள் அழிவு



கொழும்பு, மார்ச் 02

பதுளையில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட மண்சரிவால் 2 வீடுகள் முழுமையாக அழிந்தன. அத்துடன், 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

பதுளை,தெமடவெல்லின்ன கிராமத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, மண்சரிவு காரணமாக பதுளை தெமடவெல்லின்ன கிராமத்துக்கு செல்லும் பிரதான பாதையும் முற்றாகத் தடைபட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தில் கந்தகெட்டிய, பசறை, ஹாலிஎல, பதுளை, ஹப்புத்தளை, மீகஹகிவுல, ஊவா பரணகம மற்றும் சொரணாதொட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எரிபொருள் சிக்கல் தீராவிடின் சேவையிலிருந்து விலகுவோம்!

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

கொழும்பு, மார்ச் 03

எரிபொருள் பிரச்னை விரைவாகத் தீர்க்காது விடின் தனியார் பேருந்துகளை சேவையிலிருந்து விலக்கிக் கொள்ள நேரிடும் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தரவுகளின் அடிப்படையில் நாடு முழுவதும் தேவையான அளவுக்கு அதிக எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இலங்கை கனியவள விநியோகஸ்தர்களுக்கும் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளும் இன்றைய தினம் இது குறித்து கலந்துரையாடவுள்ளனர். (ஐ)

# பதிவாகும் கர்ப்பவதிகளின் எண்ணிக்கையும் வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 03

நாடு முழுவதிலும் உள்ள மருத்துவமனைகளில் பதிவு செய்யப்படும் கர்ப்பவதி தாய்மார்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இந்தத் தகவலை அரசாங்க குடும்ப சுகாதார சேவை சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நாட்டின் பிறப்பு வீதமும் குறைவடைந்துள்ளது.

அத்துடன் மருத்துவமனைகளில் கர்ப்பவதி தாய்மார்களை பதிவு செய்யும் எண்ணிக்கையும் குறைந்துள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# முப்படைகளின் 1,400 வாகனங்கள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பானவை!

கொழும்பு, மார்ச் 03

முப்படைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 400 வாகனங்கள் புகை பரிசோதனைகளில் தோல்வியடைந்துள்ளன என்று வாகன உமிழ்வு அறக்கட்டளை நிதியம் தெரிவித்துள்ளது.

முப்படைகளின் முகாம்களில் ஆய்வு செய்யப்பட்ட 6 ஆயிரம் வாகனங்களில் ஆயிரத்து 400 வாகனங்கள் முதல் சுற்று சோதனையில் தோல்வியடைந்ததாக மோட்டார் வாகனத் துறையின் வாகன உமிழ்வு அறக்கட்டளை நிதியத்தின் இயக்குநர் பொறியியலாளர் தசுன் கமகே தெரிவித்தார்.

கரும்புகையால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைக்கும் நோக்கில் "சுத்தமான இலங்கை" திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப் பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், முப்படை வாகன ஆய்வுகளும் தொடங்கப்பட்டுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 11,000 இலஞ்சம் பெற்றவருக்கு 28 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

கொழும்பு, மார்ச் 03

**11 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக பெற்ற தபால் திணைக்களத்தை சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு 28 வருட சிறைத் தண்டனை விதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.**

இறக்குமதி செய்யப்பட்ட 30 சி. சி. ரீ. வி. கமெராக்களை வரி செலுத்தாமல் விடுவிப்பதற்காக 11 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் தபால் திணைக்களத்தின் அலுவலக உதவியாளர் மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு வழக்குப் பதிவு செய்திருந்தது. மீரிகம வர்த்தகர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது.

விசாரணைகளில் 4 குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகக் கண்டறியப்பட்ட அலுவலருக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 7 ஆண்டுகள் வீதம் 28 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன், 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த நீதிபதி அதனை செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறை வாசம் அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. (ஐ)

## ஊடகவியலாளர்மீது தாக்குதல் இராணுவத்தை சேர்ந்த இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 03

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு, தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இராணுவ புலனாய்வு சேவையின் முன்னாள் உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் நவகத்தேகம மற்றும் உலுக்குளம் பகுதிகளைச் சேர்ந்த 42 மற்றும் 46 வயதுடையவர்களாவர்.

பத்திரிகை ஆசிரியரான ஊடகவியலாளர் கீத் நொயார், 2008 மே மாதம் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் உட்பட சந்தேக நபர்கள் சிலர் முன்னர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ஐ)

## விலங்குகளால் பயிர் சேதம் கட்டுப்படுத்த குழு அமைப்பு

கொழும்பு, மார்ச் 03

வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதங்களை கட்டுப்படுத்தவும் விலங்குகளை நிர்வகிக்கவும் அத்தியாவசிய பரிந்துரைகளை வழங்குவதற்கு 15 பேர் கொண்ட ஒரு சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவை கமத்தொழில், காணி, கால்நடைகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சகத்தின் செயலாளர் எம்.பி.என். எம்.

விக்ரமசிங்க, அமைச்சர் கே.டி. லால்காந்தவின் வழிகாட்டுதலின் கீழ் நியமித்துள்ளார்.

அத்துடன், கமத்தொழில், கால்நடை வளங்கள் , காணி மற்றும் நீர்பாசன அமைச்சின் மேலதிக செயலாளர் டி. எஸ். ரத்னசிங்க இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பல ஆண்டுகளாக முறையான மேலாண்மை இல்லாமல் உருவாகியுள்ள - நீண்டகால பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வு காண எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை செயல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மேலும், இந்தக் குழுவின் அனைத்து பரிந்துரைகளும் இந்த மாத இறுதிக்குள் அமைச்சரிடம் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

# தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு நேரிடும்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 03

மருத்துவர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சேவையிலான சவால்களை தீர்க்கத் தவறினால் தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகலாம் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் அண்மையில் சந்திப்பு ஒன்றை நடத்தியதாக வும், ஆனால் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை எனவும் அரசாங்க மருத்துவ அதிகாரி கள் சங்கத்தின் பேச்சாளர் சாமில் விஜயசிங்க தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி குறித்த பிரச்னைகளை விரிவாக ஆய்வு செய்ய மேலும் கால அவகாசம் வேண்டுமென கேட்டுள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுப்பது என்பது இறுதி கட்ட முயற்சியாக மட்டுமே இருக்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.இந்த வாரம் மீண்டும் ஜனாதிபதியையும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவையும் சந்திக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

2025ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் மருத்துவர்களின் கொடுப்பனைகள் மற்றும் விடுப்பு முறையில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், "மாலை 4 மணிக்குப் பிறகு பணியாற்ற முடியாத சூழ்நிலை உருவானால் நாட்டில் சுகாதார சேவையை தொடர்ந்து வழங்க முடியாது" எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், சம்பள உயர்வு வழங்கப்பட்டாலும் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டதால் சம்பள அதிகரிப்பின் பலன்கள் கிடைக்கப் பெறாது - என்றும் சாடினார். (ஐ)

## மாணவன்மீது தாக்குதல் அதிபருக்கு விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 03

அதிபர் தாக்கியதில் மாணவனின் காது கடுமையாக பாதிக்கப்பட்டது. இது தொடர்பில் கைது செய்யப்பட்ட அதிபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாதாரண தரப் பரீட்சைக்கு இம்முறை தோற்றவுள்ள மாணவனை தாக்கிய பொலநறுவை மெதிரிகிரியவை சேர்ந்த அதிபர் ஒருவரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அதிபரின் தாக்குதலில் 16 வயது மாணவனின் காதுகளிலிருந்து இரத்தம் வழிந்ததாகவும் இதையடுத்து அவர் மெதரிகிரிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து பொலநறுவை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிய வருகிறது.

மாணவன் தலைமுடியை சரியாக வெட்டவில்லை என்றும் கறுப்பு காலுறை அணிந்து பாடசாலைக்கு வந்தார் என்பதாலுமே அதிபரால் தாக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

## ரூ. 10 கோடி மதிப்பிலான போதைப்பொருள் சிக்கியது!

கொழும்பு, மார்ச் 03

10 கோடி ரூபாய்க்கும் அதிகமான போதைப்பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன், அதனை வானில் கொண்டு சென்ற சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கொப்பரா சந்தியில் வைத்து இந்தப் போதைப் பொருளை கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக தெரியவந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# இலஞ்சம் கேட்ட பொலிஸார் கைது!

கொழும்பு, மார்ச் 03

இலஞ்சம் கோரியமை, அதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டின் கீழ் இலஞ்சம் வாங்கிய உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கான்ஸ்டபிள் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் - கல்நேவ பகுதியில் ஒருவரின் கொடுக்கல் வாங்கல் பிரச்னையை தீர்த்து வைப்பதற்கு 30 ஆயிரம் ரூபாயை குறித்த இருவரும் கேட்டனர் தெரிவிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, இலஞ்சம் கேட்டல், அதற்கு உடந்தையாக இருத்தல் மற்றும் அந்தப் பணத்தைப் பெற உதவிய குற்றச்சாட்டுகளின் கீழ் கல்நேவ பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவால் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# 293 பாதாள உலக குழுவினருக்கு சர்வதேச பொலிஸ் எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 03

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள - இலங்கையில் திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் கொலைகளை நடத்தி வரும் 293 பாதாள உலக உறுப்பினர்களுக்கு சர்வதேச பொலிஸார் (இன்ரர்போல்) இதுவரை சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு 199 சிவப்பு அறிவிப்புகள், 90 நீல அறிவிப்புகள் மற்றும் 4 மஞ்சள் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் உள்ள குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு பொலிஸாருக்கு சர்வதேச ஆதரவு கிடைத்துள்ளது. மேலும், சமீபத்திய நாட்களில் வெளிநாட்டில் இருந்த 19 குற்றவாளிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த செயல்முறை தீவிரமடைவதால், குற்றவாளிகள் மற்ற நாடுகளுக்கு தப்பிச் செல்வதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ஐ)

# மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 03

நுவரெலியா, பதுளை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண் சரிவு எச்சரிக்கை மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நாட்டின் பல முக்கிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக் கப்பட்டுள்ளன என்பது குறிப்பி டத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி பணிமனைக்கு சொந்தமான 15 சொகுசு வாகனங்கள் விற்பனை!

கொழும்பு, மார்ச் 03

ஜனாதிபதி பணிமனைக்கு சொந்தமான 14 சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட 6 வாகனங்கள் வாகன உதிரிப் பாகங்களை விற்பனை செய்வதற்கான ஏலம் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இந்த ஏலத்தில் அரசாங்கத்தின் செலவுகளை குறைத்தல் மற்றும் நிதி பொறுப்புகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறு ஜனாதிபதி பணிமனைக்கு சொந்தமான வாகனங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, 9 டிபெண்டர் ரக ஜீப்கள், வொல்வோ ரக ஜீப் ஒன்று, க்ரயிஸ்லர் ரக வாகனம் ஒன்று, மஹேந்திரா பொலெரோ வாகனம் ஒன்று, ரோஸா பஸ் ஒன்று, டிஸ்கவரி வாகனம் மற்றும் டொயாடோ மோட்டார் வாகனம் உள்ளடங்களாக 15 வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை நாம் பாதுகாப்போம்!

## நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார

கொழும்பு, மார்ச் 03

**வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை பிரச்னைகளை நாங்கள் நன்கு அறிவோம். சிறந்த திட்டமிடலுடன் புதிய அரசமைப்பு வெகுவிரைவில் உருவாக்கப்படும். தமிழ் மக்கள் வழங்கியுள்ள ஆணையைப் பாதுகாப்போம். வங்குரோத்து அரசியலுக்காக இனவாதம், மதவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப் போவதில்லை - என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் பல்வேறு கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யாப்பு உருவாக்க வாக்குறுதியை மக்களுக்கு வழங்கினோமே. தவிர, எதிர்க் கட்சிகளுக்கு வழங்கவில்லை. எதிர்க்கட்சிகளின் அழுத்தங்களுக்கு அமைய செயல்படப் போவதில்லை. முறையான திட்டம் வழிகாட்டலுக்கு அமைவாக புதிய அரசமைப்பை வெகுவிரைவில் உருவாக்குவோம்.

வடக்கு ,கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை பிரச்னைகளை நாங்கள் நன்கு அறிவோம். சிறந்த மாற்றத்துக்காகவே தமிழ் மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். அந்த ஆணையை நாங்கள் பாதுகாப்போம். பிரச்னைகளுக்கு சிறந்த தீர்வை பெற்றுக்கொடுப்போம்.

இழப்பீட்டு அலுவலகத்துக்காக 2,353 மில்லியன் ரூபாய், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்துக்கு 139 மில்லியன் ரூபா, காணாமல் போனோர் அலுவலகத்துக்கு 126 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மனித புதைகுழிகள், விகாரைகள் தொடர்பில் பேசப்படுகிறது. ஒருசில அரசியல்வாதிகள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு செயல்படுவதை அவதானிக்க முடிகிறது.

யாழ் தையிட்டி விகாரைக்கு சென்று பல விடயங்களை அறிக்கையிட்டுள்ளோம்.

வங்குரோத்து அரசியலை மீண்டும் உருவாக்குவதற்கு இனவாதம் மற்றும் மதவாதம் தலைதூக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. மக்களின் பிரச்னைகளுக்கு நாங்கள் சிறந்த முறையில் முரண்பாடற்ற வகையில் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் - என்றார். (ஐ)

# திடீர் ஆற்று வெள்ளத்தில் சிக்கிய 35 பேர் மீட்கப்பட்டனர்!

கொழும்பு, மார்ச் 03

ஹிரிகட்டு ஓயாவின் நீர்மட்டம் திடீரென உயர்ந்ததால் அதில் சிக்கிய 35 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

கொலன்னாவை - நன்பெரியல் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினரால் இவர்கள் காப்பாற்றப்பட்டனர். நன்பெரியல் பகுதிக்கு 75 பேர் வரை சென்றிருந்தனர்.

இந்த நிலையில் ஹிரிகட்டு ஓயாவின் நீர்மட்டம் திடீரென உயர்ந்தது. விரைந்து செயல்பட்ட அங்கிருந்த இராணுவத்தினர் ஆற்றில் சிக்கிய 35 பேரை பாதுகாப்பாக மீட்டனர். (ஐ)

# ஜனாதிபதி அநுர ஜப்பான் பயணம்

கொழும்பு, மார்ச் 03

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க 4 நாள் உத்தியோகபூர்வ பயணமாக ஜப்பான் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட அதிகாரிகள் பங்கேற்பர். எதிர்வரும் 22 ஆம் திகதியளவில் நடைபெறும் இந்தப் பயணத்தில் இரு நாட்டு பொருளாதார ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இதேவேளை, வெளியுறவு துறைக்கான ஜப்பான் பாராளுமன்ற துணை அமைச்சர் இகுய்னா அகிகோவை சந்தித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடி இருந்தார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வின் பக்க நிகழ்வாக இடம்பெற்ற சந்திப்பின்போது, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் ஜப்பான் பயணம் குறித்தும் பேசப்பட்டுள்ளது. (ஐ)

# எரிபொருள் வரிசைக்கு அரசாங்கமே காரணம்!

## சஜித் பிரேமதாஸ சாடல்

கொழும்பு, மார்ச் 02

எரிபொருள் விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தத்தை எந்தப் பேச்சும் நடத்தாமலேயே அரசாங்கம் திடீரென நிராகரித்தமையால் நாட்டில் தற்போது எரிபொருள் வரிசை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் - மதவாச்சியில் பங்கேற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எரிபொருள் நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும். இதனால், அழுத்தத்துக்கு உள்ளாவது ஜனாதிபதியோ, பிரதமரோ, அல்லது அமைச்சர்களோ அல்லர், சாதாரண மக்களே இந்த பிரச்னையை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, எரிபொருள் விநியோகஸ்தர்களுடன் பேச்சு நடத்தி, உடனடி தீர்வுகளை காண வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றார்.

# புதிய அரசமைப்பின் திட்ட வழிகாட்டல் வரைவு என்ன?

## தெளிவுபடுத்த வேண்டும் என்கிறார் அஜித் பெரேரா

கொழும்பு, மார்ச் 03

அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும் புதிய அரசமைப்பை தயாரிக்கும் பொறுப்பு நீதி அமைச்சருக்கே இருக்கிறது. அதனால், அரசாங்கத்தின் புதிய அரசமைப்பின் திட்ட வழிகாட்டல் வரைவு என்ன என்பதை நீதி அமைச்சர் தெரிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் அஜித் பி பெரேரா தெவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு,

அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரமும் எமது கொள்கையும் புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதனால் அரசாங்கம் தெரிவித்துள்ளதன் பிரகாரம் புதிய அரசமைப்பு தயாரிக்கும் பொறுப்பு நீதி அமைச்சருக்கே இருக்கிறது.

அதனை மேற்கொண்டு அனுமதித்துக்கொள்வதற்கான ஆதரவு அரசாங்கத்திடம் இருக்கிறது. அதேநேரம் எதிர்க்கட்சியில் இருக்கும் பெரும்பாலானவர்கள் புதிய அரசமைப்புக்கு ஆதரவளிக்க தயாராக இருக்கின்றனர்.

இதேநேரம், புதிய அரசமைப்பை ஏற்படுத்தி தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க சிறந்த அரசியல் சூழல் தற்போது இருக்கிறது. அதனால் அரசாங்கத்தின் புதிய அரசியல் அமைப்பு திட்ட வழிகாட்டல் வரைவு என்ன? என நீதி அமைச்சரை கேட்கிறேன். புதிய அரசமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இரண்டு பேர் ஜனாதிபதியிடம் இந்த சபையில் கேட்டபோதும் அதற்கு ஜனாதிபதி பதிலளிக்கவில்லை - என்றார். (ஐ)

# ஐ. எம். எவ்வின் கடன் கிடைத்தமை வெளிநாட்டு முதலீடுகளுக்கு வாய்ப்பு

## பொருளாதார அபிவிருத்த பிரதி அமைச்சர்

கொழும்பு, மார்ச் 03

நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய மூன்றாம் கட்ட மீளாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமையால் நான்காம் கட்ட கடனுதவியாக 33.4 கோடி டொலர்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. இது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் சிறந்த குறிகாட்டியாகுமென தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னான்டோ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மூன்றாம் கட்ட மீளாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமையால் நான்காம் கட்ட கடனுதவியாக 33.4 கோடி டொலர்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் இந்த திட்டம் இல்லாதொழிக்கப்படும் என்றும் நாடு வன்முறையாக மாறும் என்றும் பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டன.

எவ்வாறிருப்பினும் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றுள்ளோம். அதன் பிரதிபலனாகவே நான்காம் கட்ட கடன் தொகையை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

எவ்வாறிருப்பினும், வருமான வரி உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த விடயங் களில் திருத்தங்களை மேற் கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட் டங்களை தொடர்ந்தும் முன் னெடுத்துச் செல்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டில் ஸ்திர பொருளாதாரத்தைப் பேணுதல், கடன் ஸ்திரத்தன்மையை பேணுதல், இவற்றை எதிர்கொள்ளும் போது பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் என்பவை தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது - என்றார். (ஐ)

# இந்திய பிரதமர் மோடியுடன் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு

கொழும்பு, மார்ச் 03

புதுடில்லிக்கு பயணம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, பல தரப்பட்ட பிரச்னைகள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவின் கண்ணோட்டத்தை பாராட்டினார் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

“உலகளாவிய விசேட முன்னேற்றங்கள்“ குறித்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை இந்தியா சென்றார். உலகளாவிய முக்கிய இராஜதந்திரிகளின் பங்கேற்புடன் கடந்த இரு நாட்களாக நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டார்.

இதன் போது தெற்காசிய புவிசார் அரசியல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்புரையாற்றினார். இதன்போதே, இந்திய பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்து கலந்துரையாடினார்.

“எனது நண்பர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்ததில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அவருடனான உரையாடல்களை நான் எப்போதும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன். பல்வேறு பிரச்னைகள் குறித்த ரணில் விக்கிரமசிங்கவின் கண்ணோட்டத்தைப் பாராட்டியிருக்கிறேன் என சந்திப்பு குறித்து பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வங்கிகளில் பணம் கொள்ளை

## மக்கள் வங்கிக்குள் சுமணரத்ன தேரர் ரகளை

மட்டக்களப்பு, மார்ச்.03

**அரசாங்க வங்கிகளில் மக்களின் பணம் கொள்ளையிடப்படுவதாகவும் தான் வங்கியில் வைப்பு செய்த பணம் திருடப்பட்டுள்ளதாகவும் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் குற்றஞ் சாட்டியுள்ளார்.**

மட்டக்களப்பு மக்கள் வங்கிக் கிளைக்குள் நுழைந்து கூச்சலிட்ட தேரர் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

வங்கி அதிகாரிகள் மற்றும் வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை கடுந்தொனியில் திட்டி அவர்களை அச்சுறுத்தி அவர்களை தாக்குவதற்கும் சுமணரத்ன தேரர் முயற்சித்த காணொளி வெளியாகியுள்ளது.

மேலும், அரச வங்கிகளில் அப்பாவி பொதுமக்களின் பணம் கொள்ளையிடப்படுவதாகவும் இவ்வாறு பணம் கொள்ளையிடப்படுவது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வங்கிகளின் பிரதானிகள், வைப்பிலிட்ட பணம் களவாடப்படும் நடவடிக்கைகளைத் தடுக்க தவறியுள்ளதாக தேரர் தெரிவித்துள்ளார்.

தனது வங்கிக் கணக்கில் வைப்புச் செய்த பணம் எவ்வாறு வேறு ஒரு வங்கியின் வைப்பாளரது கணக்கில் வைப்பிலிடப்பட்டது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தப் பிரச்னைக்கு மத்திய வங்கி ஆளுநரும் நிதி அமைச்சரும் பொறுப்புக் கூற வேண்டும்.

பணத்தை வழங்கினால் எந்த விதமான பிரச்னையுமின்றி தான் வங்கியை விட்டுச் செல்ல தயார் எனவும் தேரர் தெரிவித்துள்ளார். (எ)

# கல்முனை மாநகர சபைக்கு எதிராக மக்கள் போராட்டம்



கல்முனை, மார்ச்.03

கல்முனை மாநகர சபையால் கொட்டப்படும் குப்பைகளால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக குற்றஞ்சாட்டி கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத்திட்ட மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டமானது கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றதுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதான வீதியை மறிக்க தீர்மானித்த வேளை சம்பவ இடத்துக்கு வருகை தந்த கல்முனை தலைமையக பொலிஸார், போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் குறித்த பிரச்னைக்கான சமரச முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் சிறுவர்கள் உட்பட பலர் பங்கேற்றதுடன் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாகைகளை ஏந்தி நீதி வேண்டி கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் பொலிஸாரின் ஆலோசனைக்கமைய குறித்த போராட்டம் நிறைவு செய்யப்பட்டு உரிய அதிகாரிகளிடம் பேசி தீர்வொன்றை பெற ஆவண செய்ய நடவடிக்கை எடுக்க கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர இப்பகுதியில் மாநகர சபையினராலும் தனியார் சிலராலும் கொட்டப்படும் குப்பைகளால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். மேலும், குப்பைகள் எரிக்கப்படுவதனால் பாடசாலை மாணவர்கள் முதல் வயோதிபர்கள் வரை சுவாச பிரச்னைக்கு உள்ளாவதுடன் யானைகளின் அச்சுறுத்தலும் தொடர்வதாக கூறினர். (எ)

# முறைப்பாடுகளை தெரிவிக்க கியூ. ஆர். குறியீட்டு முறைமை

கல்முனை, மார்ச்.03

பொதுமக்கள் தங்களது சுகாதார சேவைகள் குறித்த முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்காக கியூ. ஆர். குறியீட்டு முறைமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கு அமைவாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொது இடங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்களில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கான இந்த கியூ. ஆர். குறியீட்டு ஸ்டிக்கர் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது மாவட்ட மருத்துவமனையின் பொறுப்பு வைத்திய அதிகாரியும் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான சனூஸ் காரியப்பர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மேலும், இந்த நிகழ்வில் சாய்ந்தமருது ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவரும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்துக்குட்பட்ட உணவு கையாளும் நிறுவனத் தலைவர்களும் கலந்துகொண்டனர். (எ)

## சம்மாந்துறையில் நரிகள் நடமாட்டம்

கல்முனை, மார்ச்.03

சம்மாந்துறையில் வயல் அறுவடை இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில் அப்பகுதியில் நரிகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெய்னாகாடு மல்கம்பிட்டி பகுதிகளில் இவ்வாறு நரிகளின் நடமாட்டம் காணப்படுகிறது.

நரிகள் ஒரு சூழல் தொகுதியின் சமநிலைக்கு மிக முக்கியமானது. மயில்கள் போன்ற வற்றை கட்டுப்படுத்தியும், மற்ற சிறு வேட்டையாடிகளின் பரவலை சமநிலைப்படுத்தியும் விவசாயிகளுக்கும், மக்களுக்கும் நன்மைகள் செய்கின்றன என்று இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் உயிரியல் விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. எம். நியாஸ் அகமட் குறிப்பிட்டுள்ளார். (எ-01)

# மாணவியை கர்ப்பமாக்கிய இளைஞன் விளக்கமறியலில்

மட்டக்களப்பு, மார்ச்.03

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் 18 வயதுடைய மாணவி ஒருவர் மலசல கூடத்தில் குழந்தையை பெற்று ஜன்னல் வழியாக வீசிய சம்பவம் தொடர்பில் மாணவியை கர்ப்பமாக்கிய இளைஞன் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் 18 வயதுடைய மாணவி ஒருவர் வயிற்று வலி எனத் தெரிவித்து அதிகாலை 03. 30 மணிக்கு அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் அதிகாலை 05. 00 மணிக்கு மலசலகூடத்தில் குழந்தையை பெற்றெடுத்து ஜன்னல் வழியாக வீசிய நிலையில் குழந்தை ஜன்னலில் கீழ் உள்ள பிளேற்றில் வீழ்ந்து அழுகுரல் கேட்டதையடுத்து தாதியர்கள் குழந்தையை மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த மாணவியை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவரை 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், குறித்த மாணவியை கர்ப்பமாக்கிய 24 வயதுடைய காதலனை கைது செய்து மட்டக்களப்பு நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தினர். அவ ரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# சம்மாந்துறையில் நேற்றும் எரிபொருளுக்கு நீண்ட வரிசை




கல்முனை, மார்ச்.03

எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் நீண்ட வரிசையில் மக்கள் நேற்றும் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, சம்மாந்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் இல்லை என்று அறிவித்தல் போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சம்மாந்துறை பகுதியில் தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக வாகனச் சாரதிகள், தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். (எ)

# 13 இலட்சம் ரூபா பணம் திருட்டு சம்மாந்துறையில் ஒருவர் கைது

சம்மாந்துறை, மார்ச்.03

பெருந்தொகை பணம் திருடிய குற்றச்சாட்டியில் சம்மாந்துறையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீட்டை உடைத்து 13 இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் கடந்த 27 ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய சம்மாந்துறை பொலிஸார் குறித்த பகுதியில் உள்ள வீடு மற்றும் வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரிவி கமராவை சோதனை செய்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்போது, நேற்று முன்தினம் சனிக்கிழமை மலையடிக்கிராமம் பகுதியைச் சேர்ந்த 34 வயது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து திருடப்பட்ட பணத்தின் ஒரு தொகையையும், திருட்டுச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், வீடு உடைப்பதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் என்பனவற்றையும் சம்மாந்துறை பொலிஸார் கைப்பற்றினர். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 கிலோ வெடி மருந்துடன் 20 பயங்கரவாதிகள் கைது

இஸ்லாமாபாத்,மார்ச்.03

பாகிஸ்தானில் 6 கிலோ வெடி மருந்துடன் 20 பயங்கர வாதிகள் கைது செய்யப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல் அதிகரித்துள்ளது. குறிப்பாக எல்லையோர மாகாணங்களில் அடிக்கடி அவர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். இதற்கிடையே பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் பயங்கரவாதிகள் ஊடுருவி இருப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, நேற்றுக் காலை பொலிஸார் அங்கு தீவிர ரோந்து பணி மேற்கொண்டனர்.

இதில் தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 20 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 6 கிலோ வெடி மருந்து, 20 வெடிகுண்டுகள் போன்றவை கைப்பற்றப்பட்டன. இதனால், அங்கு பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. (ஏ)

# ஆற்றில் படகுகள் மோதி சீனாவில் 11 பேர் மரணம்

பீஜிங், மார்ச்.03

சீனாவில் ஆற்றில் படகுகள் மோதிய விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.


ஹூனான் மாகாணத்தில் யுவான்ஷுய் என்ற ஆறு பாய்கிறது.

இதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் படகு போக்குவரத்தே பிரதானமாகவுள்ளது. எனவே, அந்த ஆற்றில் ஏராளமான படகுகள் செல்வது வழக்கம்.

அந்தவகையில் நேற்றுக் காலை ஒரு படகு பொதுமக்களை ஏற்றிச் சென்றது. அப்போது, அந்த ஆற்றில் எண்ணெய்க் கசிவை சுத்தம் செய்யும் ஒரு பெரிய படகும் சென்று கொண்டிருந்தது. இந்த இரண்டு படகுகளும் ஒன்றையொன்று மோதின. இதனால், படகிலிருந்த பலர் ஆற்றில் தவறி விழுந்தனர்.

தகவலறிந்த மீட்புப் படையினர் அங்கு சென்று நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். எனினும், இந்த விபத்தில் 11 பேர் ஆற்றில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்தனர். (ஏ)

# 40 ஆண்டு கால உள்நாட்டு போர் துருக்கியில் முடிவுக்கு வந்தது!



அங்காரா,மார்ச்.03

துருக்கியில் 40 ஆண்டு காலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டுப் போரை நிறுத்துவதாக குர்திஸ் தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளது.

கடந்த 1978ஆம் ஆண்டு அப்துல்லா ஒசலான் உருவாக்கிய குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி, 1984ஆம் ஆண்டு முதல் கிளர்ச்சியை ஏற்படுத்தி உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வந்தது.

இதனால், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி தடை செய்யப்பட்டதோடு, தேச துரோக குற்றச்சாட்டில் 1999ஆம் ஆண்டு ஒசலான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இதனிடையே, 40 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டுப் போரில், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இந்தப் போரால் தென் கிழக்கு துருக்கி, சிரியா, வடக்கு ஈராக் மற்றும் ஈரான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்தச் சூழலில்,

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் ஆயுதப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர விரும்புவதாக அந்த அமைப்பின் தலைவர் ஒசலான் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, துருக்கியில் 40 ஆண்டுகாலமாக நீடித்து வந்த உள்நாட்டுப் போரை நிறுத்துவதாக குர்திஸ் தொழிலாளர் கட்சி நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்துள் ளது. தங்கள் மீது தாக்குதல் நடத்தப்படாத வரை, இனி ஆயுதம் ஏந்திப் போராட மாட் டோம் என்று குர்திஸ் தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளது. (ஏ)

# உக்ரைனுக்கு நிரந்தர அமைதி அவசியம்!

## ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவிப்பு



கீவ், மார்ச்.03

**" உக்ரைனுக்குக்கு நியாயமான மற்றும் நிரந்தர அமைதி தேவை, அதற்காக நாங்கள் சரியாக பாடுபடுவோம்"- இவ்வாறு அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.**

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நேற்று முன்தினம் அமெரிக்கா சென்றார். வெள்ளை மாளிகையில் அவர் ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பை அடுத்து ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது, ஜெலன்ஸ்கியின் கருத்தை மறுத்து ட்ரம்ப் பேசியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் போது அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஜே. டி. வான்ஸ், "அமெரிக்கா இராஜாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. போரை நிறுத்துவதற்காக ரஷ்யாவுடன் இராஜதந்திர முறையில் பேச்சுக்களை நடத்தி வருகிறது. உங்களின் செயல்பாடு, உங்களின் நாட்டுக்கு அழிவை ஏற்படுத்திவிடும். உங்களின் நிலைப்பாடு உங்களின் நாட்டை அழித்துவிடும்"-என்றார்.

இதைக் கேட்டு கோபமடைந்த ஜெலன்ஸ்கி, "ரஷ்யாவை நீங்கள் தடுக்கவே இல்லையே. ரஷ்யா 2019இல் இருந்தே போரை மேற்கொண்டு வருகிறது. அவரை(புடினை) நீங்கள் தடுக்கவே இல்லை. நீங்கள் எதை இராஜாங்க செயல்பாடு, இராஜதந்திர செயல்பாடு என்று சொல்கிறீர்கள்? போர் என்றால் சிக்கல் தான்.

உங்களுக்கும் ரஷ்யாவுக் கும் இடையே கடல் இருக்கி றது என்பதால் உங்களுக்கு ஆபத்து இல்லை என்று நினைக்க வேண்டாம். எதிர்காலத்தில் ரஷ்யாவால் உங்களுக்கும் ஆபத்து வரும்"- என்றார்.

இதற்குப் பதிலளித்த ட்ரம்ப், "உக்ரைன் நல்ல நிலைமையில் இல்லை. நீங்கள் மிக மோசமான சூழலில் உள்ளீர்கள். உங்களுக்குச் சாதகமாக எதுவும் இல்லை. இதற்கு எல்லாம் காரணம் நீங்கள்தான். உக்ரைன் மோசமான சூழலுக்கு மாற அனுமதித்தது நீங்கள்தான். இந்த மோசமான சூழலில் உங்களுக்குச் சாதகமான அம்சங்கள் இல்லை, நீங்கள் பல கோடி மக்களின் உயிரோடு விளையாடிக்கொண்டு இருக்கிறீர்கள்"- என்றார்.

இதற்கு கோபமாக பதிலளித்த ஜெலன்ஸ்கி, "நீங்கள் இரண்டு நாட்டுப் போரைப் பற்றி சத்தமாக இப்படி மீடியா முன் பேசுவது சரியா என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

நாங்கள் விளையாட வில்லை. இந்தப் போரை நாங்கள் தனியாக எதிர்கொண்டு வருகிறோம். நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம். அதற்கு நன்றி"- கூறினார்.

இவ்வாறு, ஒருவரை ஒருவர் தாக்கிப்பேசியதால் திட்டமிடப்பட்டிருந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் நிகழ்வு இரத்தானது. பின்பு வெள்ளை மாளிகையிலிருந்து ஜெலன்ஸ்கி வெளியேறினார்.

இந்த நிலையில் ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் பதிவில், "அமெரிக்காவுக்கு நன்றி, உங்கள் ஆதரவுக்கு நன்றி. ட்ரம்புக்கும் நன்றி, உக்ரைனுக்குக்கு நியாயமான மற்றும் நிரந்தர அமைதி தேவை, அதற்காக நாங்கள் சரியாக பாடுபடுவோம்"- என்று குறிப்பிட்டுள்ளார். (ஏ)

# தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து!

வாஷிங்டன், மார்ச்.03

அமெரிக்காவில் வெடிமருந்து தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

வர்ஜீனியா மாகாணத்தின் தென்மேற்கு பிராந்தியத்தில் வெடிமருந்து தொழிற்சாலை அமைந்துள்ளது.

இதில், 100இற்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். இந்த நிலையில் தொழிற்சாலையின் ஒரு பகுதியில் உள்ள வெடி மருந்து கிடங்கு நேற்று அதி காலை திடீரென வெடித்து சிதறியது.

இதனால், ஏற்பட்ட தீ மளமளவென மற்ற பகுதிகளுக்கும் வேகமாகப் பரவியது. இதனையடுத்து அங்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதிகாலை நேரம் என்பதால் ஊழியர்கள் அதிகளவில் இல்லை.

எனவே, பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட் டது. இதுகுறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஏ)

# அபாய கட்டத்தை தாண்டிய பாப்பரசர் பிரான்சிஸ்

வாடிகன், மார்ச்.03

பாப்பரசர் பிரான்சிஸ் உடல்நிலையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் (வயது-88) மூச்சுக்குழாய் அழற்சி காரணமாக கடந்த மாதம் 14ஆம் திகதி ரோமில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில், அவருக்கு நிமோனியா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் பாப்பரசர் பிரான்சிஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நேற்றுடன் 2 வாரங்கள் ஆன நிலையில், அவர் அபாய கட்டத்தை தாண்டிவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஏ)

# சீன பல்கலைக்கு தாய்வானில் தடை

தைபே நகரம், மார்ச்.03

சீன பல்கலைக்கழகங்களுக்கு தாய்வான் அரசு தடை விதித்துள்ளது.

சீனாவைச் சேர்ந்த பீஹாங் பல்கலைக்கழகம், பீஜிங் தொழில்நுட்ப நிறுவனம், நான்ஜிங் விமானவியல் மற்றும் விண்வெளி பல்கலைக்கழகம் உள்ளிட்ட 7 பல்கலைக்கழகங்களுக்கு தாய்வான் தடை விதித்துள்ளது.

இதுகுறித்து தாய்வான் அரசாங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக சீன பல்கலைக்கழகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, அவற்று டன் தாய்வானில் உள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் எந்தவித கல்வி நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




# டுபாய் ஓபின் ரென்னிஸ் சிட்சிபாஸ் சம்பியன்!

டுபாய், மார்ச்.03

டுபாய் ஓபின் ரென்னிஸ் தொடரில் சிட்சிபாஸ் சம்பியனானார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் இந்த ரென்னிஸ் தொடர் நடைபெற்று வந்தது. இதில், நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் கிரீஸ் வீரர் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், கனடா வீரர் பெலிக்ஸ் ஆகருடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிட்சிபாஸ் சிறப்பாக விளையாடினார். இதனால் 6-3, 6-3 என்ற கணக்கில் சிட்சிபாஸ் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கவீகரித்தார். (எ)



# உலக செஸ் தரவரிசையில் 3ஆவது இடத்தில் குகேஷ்

புதுடில்லி, மார்ச்.03

உலக செஸ் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச செஸ் சம்மேளனம் நேற்று முன்தினம் வெளியிட்டது. இதன்படி, முன்னாள் உலக சம்பியனான நோர்வேயின் மாக்னஸ் கார்ல்சென் (2,833 புள்ளி), ஜப்பானின் ஹிகாரு நகமுரா (2,802) முறையே முதல் இரு இடங்களில் தொடருகின்றனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் உலக செஸ் சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய இந்தியாவின் சென்னையைச் சேர்ந்த 18 வயது குகேஷ் (2,787) 10 புள்ளிகள் அதிகரித்து 2 இடம் முன்னேற்றம் கண்டு 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இது அவரது சிறந்த தரநிலையாகும். சென்னையைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டரான பிரக்ஞானந்தா (2,758) 8ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அவர் கடந்த ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பிறகு முதல் 10 இடங்களுக்குள் வருவது இதுவே முதல்முறையாகும்.

வீராங்கனைகள் தரவரிசையில் இந்தியாவின் கோனேரு ஹம்பி (2,528) 6ஆவது இடத்திலும், ஆர். வைஷாலி (2,484) 14ஆவது இடத்திலும், ஹரிகா (2,483) 16ஆவது இடத்திலும் உள்ளனர். (எ)



# தென்னாபிரிக்கா அசத்தல் வெற்றி!



கராச்சி, மார்ச்.03

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர், தென்னாபிரிக்காவின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தனர். இறுதியில் 38. 2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த இங்கிலாந்து 179 ஓட்டங்களுக்கு சுருண்டது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக ஜோ ரூட் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

அபாரமாக பந்துவீசிய தென்னாபிரிக்கா தரப்பில் மார்க்கோ ஜோன்சன், முல்டர் தலா 3 விக்கெட்களும், கேஷவ் மகராஜ் 2 விக்கெட்களும் வீழ்த்தி அசத்தினர். இதனையடுத்து 180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா துடுப்பெடுத்தாடியது.

இறுதியில் அந்த அணி 29.1 ஓவரில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 181 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் குரூப் பி - பிரிவில் 5 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா முதல் இடத்துக்கு முன்னேறியது.(எ)

# சம்பியன்ஸ் தொடர் அரையிறுதியில் ஆஸி.

டுபாய், மார்ச்.03

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்தத் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் மோதுகின்றன.

லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும். இதில், குரூப் - ஏ பிரிவிலிருந்து இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் அரையிறுதிக்கு முன்னேறி விட்டன.


இந்தத் தொடரில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்திரேலியா - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இந்த ஆட்டம் மழையால் கைவிடப் பட்டதால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. இதன் காரணமாக அவுஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு முன்னேறியது. (எ)

# பிரக்ஞானந்தா வெற்றி

பிராக், மார்ச்.03

பிராக் மாஸ்டர்ஸ் சர்வதேச செஸ் போட்டி செக்குடியரசில் நடைபெற்று வருகிறது. 9 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் இந்திய கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா, அரவிந்த் சிதம்பரம் உட்பட 10 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதன் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் தமிழகத்தை சேர்ந்த பிரக்ஞானந்தா, செக்குடியரசின் நுயென் தாய் டாய் வானை தோற்கடித்தார். முதல் இரு ஆட்டங்களில் சமநிலை கண்டிருந்த பிரக்ஞானந்தா இந்தத் தொடரில் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். (எ)




# இரட்டையர் பிரிவில் யுகி ஜோடி சம்பியன்



டுபாய், மார்ச். 03


டுபாய் ஓபின் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் யுகி பாம்ப்ரி ஜோடி சம்பியனானது.

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள டுபாய் சர்வதேச ரென்னிஸ் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வந்தது.

இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ப்ரி- அவுஸ்திரேலியாவின் அலெக்சி பாபிரின் ஜோடி, ஹாரி ஹெலியோவாரா (பின்லாந்து) - ஹென்றி பேட்டன் (இங்கிலாந்து) இணையுடன் மோதியது.

இதில், முதல் இரு செட்களை இரு அணிகளும் ஆளுக்கொன்றாக கைப்பற்றிய நிலையில் 3ஆவது செட்டை யுகி பாம்ப்ரி ஜோடி கைப்பற்றி வெற்றி பெற்றது. யுகி பாம்ப்ரி இணை இந்த ஆட்டத்தில் 3 - 6, 7 - 6 மற்றும் 10 - 8 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (எ)

# 9 விக்கெட்களால் டில்லி அணி வெற்றி



பெங்களூரு, மார்ச்.03

ஆர். சி. பி. அணியை 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி டில்லி அணி அபார வெற்றி பெற்றது.

5 அணிகள் பங்கேற்றுள்ள 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் 2ஆவது கட்ட லீக் ஆட்டங்கள் இந்தியாவின் பெங்களூருவில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 14ஆவது லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு(ஆர். சி. பி.) - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரு அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழந்து 147 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக எல்லிஸ் பெர்ரி 60 ஓட்டங்கள் எடுத்தார். டில்லி தரப்பில் ஷிகா பாண்டே, நல்லபுரெட்டி ஷாரனி ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதையடுத்து 148 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி அணி விளையாடியது.

தொடக்கத்தில் மெக் லேனிங் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஷபாலி வர்மா, ஜெஸ் ஜோன்சன் இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர் . அதிரடி காட்டிய இருவரும் அரைச்சதம் அடித்தனர். இறுதியில் டில்லி அணி 15. 3 ஓவர்களில் ஒரு விக்கெட் மட்டும் இழந்து 151 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் டில்லி வெற்றி பெற்றது. ஷபாலி வர்மா 80 ஓட்டங்களும், ஜெஸ் ஜோன்சன் 61 ஓட்டங்களும் எடுத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீ.வீ.கே...

மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "அவ்வாறான கடிதம் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. கடிதம் கிடைக்கப்பெற்றவுடன் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்", - என்றார்.

## இந்தியா...

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மீனவர் பிரச்னையை சட்ட ஒழுங்காகவோ, எல்லை பிரச்னையாகவோ அணுகாமல் மனிதாபிமான பிரச்னையாக அணுக வேண்டும் என்றே இந்திய அரசு, இலங்கை அரசிடம் வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில், மீனவர் பிரச்னை தொடர்பாக தாம் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதமொன்றை எழுதியதாகவும், குறித்த கடிதத்துக்கு பதிலளித்த அவர் இந்தியா- இலங்கை கூட்டுப் பணிக்குழு கூட்டம் விரைவில் நடைபெறும் எனக் குறிப்பிட்டாரெனவும் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மீனவர் பிரச்னைக்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து நிரந்தர தீர்வு காண வேண்டும் என தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார். (ஐ)

## தேர்தலை...

சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் கூறுகையில்,

"நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளுடன் எவ்விதத்தில் இந்தத் தேர்தலை அணுக முடியும், தேர்தலில் வெவ்வேறு அணிகளாக போட்டியிட்டாலும் ஆட்சி நிர்வாகங்களை அமைக்கின்றபோது சேர்ந்து அமைக்கக்கூடிய வகையில் தேர்தலுக்கு முன்னரே ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடி வருகிறோம். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சபைக்கும் ஏற்ற வகையில் தீர்மானங்கள் எடுக்கப்படும். அனைவரின் கருத்துகளும் உள்வாங்கப்படுகின்றன" - என்றார். (ஐ)

## பௌத்த...

மீட்டெடுக்கவும் மத மற்றும் கலாசார மறுமலர்ச்சியை உருவாக்க வும் இந்த வாய்ப்பு உதவும்.

நாட்டில் பௌத்த மறுமலர்ச்சியை உருவாக்க இந்த நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, புத்தாண்டின் நீட்சியாக நடைபெறும் தலதா கண்காட்சி நாட்டை புதிய திசையில் இட்டுச் செல்லும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

பத்து நாட்கள் நடைபெறும் தலதா கண்காட்சியில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி, எந்தவித தடைகளும் அல்லது இடையூறுகளும் இல்லாமல் தலதா மாளிகையை வழிபடும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவது அனைவரின் பொறுப்பு என்றும், இதற்காக அரசாங்கம் உச்ச பங்களிப்பையும் தலையீட்டையும் வழங்கும் எனவும் தெரிவித்தார்.

முக்கியமாக மூன்று வரிசைகளின் ஊடாக வரும் பொதுமக்களுக்கு, தலதா மாளிகையை வழிபடும் வாய்ப்பை வழங்குவது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது.

தலதா மாளிகை மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பாக மகா நாயக்க தேரர்கள் வழங்கும் அறிவுறுத்தல்களின்படி செயல்படுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார். (ஐ)

## 3சதவீத...

மடங்கு எரிபொருள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட் டதாக இலங்கை கனியவளக் கூட்டுத் தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இதேசமயம், நேற்றைய தினம் முதல் எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின்சார...

பரிந்துரையின்பேரில், நாட்டின் தற்போதைய விதிமுறை களின்படி, மின்சார கட்டண மாற்றங்கள் ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டும் என மின்சார சபையின் பேச்சாளர் பொறியியலாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

மின்சார உற்பத்தி செலவுகள் அதிகரிப்பு காரணமாக கட்டணம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மின்சக்தி அமைச்சர் குமார ஜயகொடி அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

தற்போதைய வறட்சி காரணமாக நிலைமை கடினமாக இருப்பதாகவும் மே மாதத்தில் மழை பெய்யுமாயின் செலவுகள் குறையலாம். தற்போது எரிபொருள் மூலமானமின்சார உற்பத தியின் அளவு வெகுவாக அதிகரித்துள்ளது என்றும் கூறியிருந்தார்.

இதேவேளை, எரிசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால, வருங்கால மின்சார கட்டண மாற்றங்கள் பற்றிய எந்த உத்தியோகபூர்வ முடிவும் எடுக்கப்படவில்லை. இது வானிலை நிலைமைகளை பொறுத்தே அமையும் - என்றார். (ஐ)

## பாதாள...

விநியோகத்துக்கு பாதிப்பு ஏற்பட் டது.

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு நூற்றுக்கு 3 ரூபாய் என்ற அடிப்படையில் மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு காலத்திலும் இந்த பிரச்னை காணப்பட்டது. எரிபொருளின் விலை உயர்வடையும்போது வழங்கப்பட்ட மேலதிக கட்டணம் அதிகரிக்கப்படும். இது ஒரு முறையற்ற செயல்பாடாகவே காணப்பட்டது.

முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர இதற்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்தார். தற்போது இந்த அரசாங்கம் 3 ரூபாய் மேலதிக தொகையை வழங்குவதை இடைநிறுத்துவதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எரிபொருள் விநியோகஸ்தர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள். அரசாங்கம் இவ்விடயத்தின் தான்தோன்றித்தனமாக செயல்படாமல், எரிபொருள் விநியோகஸ்தர்களுடன் பேச்சில் ஈடுபட வேண்டும். அரசாங்கம் ஒருசில விடயங்களில் தன்னிச்சையாக செயல்படுவது பல பிரச்னைகளுக்கு பிரதான காரணியாக அமைகிறது.

பாதாளக்குழுக்களின் செயல்பாடுகளுக்கு அரசாங்கம் கடந்தகால அரசாங்கங்களை குற்றஞ்சாட்டுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. பாதாள குழுக்களின் செயல்பாட்டுக்கான ஆரம்பத்தை மக்கள் விடுதலை முன்னணியே ஆரம்பித்து வைத்தது.

விடுதலை புலிகள் அமைப்பின் ஆயுதங்களில் பெரும்பாலானவற்றை பாதுகாப்பு அமைச்சு கைப்பற்றியது. மிகுதி ஆயுதங்கள் அழிக்கப்பட்டன. மக்கள் விடுதலை முன்னணி 1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அரச படைகளில் இருந்து கைப்பற்றிய பெரும்பாலான ஆயுதங்கள் முழுமையாக பாதுகாப்பு அமைச்சுக்கு ஒப்படைக்கப்படவில்லை. சட்டவிரோத ஆயுதங்களை செயலிழக்க செய்ய வேண்டுமாயின் அதற்கான ஆரம்ப பணியை மக்கள் விடுதலை முன்னணியின் பத்தரமுல்லை பணிமனையில் இருந்து மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# மட்டுவில் சனசமூக நிலையத்தில் மரநடுகை



யாழ்ப்பாணம், மார்ச்.03

சாவகச்சேரி, மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலைய 77ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை மோகனதாஸ் விளை யாட்டு மைதானத்தில் மரம் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்தவர்களையும் கழகத்தின் வளர்ச்சியில் பங்காற்றி அமரத்துவம் அடைந்தவர்களையும் நினைவு கூரும் முகமாகவும் இந்த மர நடுகை நிகழ்வு நடைபெற்றது. (எ-05)

# செல்லப்பா சுவாமிகள் குருபூசை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 03

ஈழத்துச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 09 மணி முதல் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அருகே அமைந்துள்ள அவரின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் சைவப்பிரகாச பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில், திருமுறை, நற்சிந்தனை பாடல்களைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் தற்காலச் சமயநிலை தொடர்பில் ஓய்வுநிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் கலந்து கொண்டு உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து செல்லப்பா சுவாமிகளின் குருபூசை வழிபாடுகளும் நடைபெறும். (ஐ)

## சிறப்புரிமையை...

பாராளுமன்றத்தில் சிறப்புரிமை வழங்கப்படுவது மக்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே தவிர, பொய்யுரைப்பதற்கு அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுன கட்சியின் சட்டத்தரணிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பாராளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில் பொய் சொல்வதற்கு இருக்கும் உரிமையை நாம் நீக்க வேண்டும் எனக் கடந்த நாளில் பாராளுமன்றத்தில் தெரிவித்தேன். இன்று நீங்கள் கேள்வி கேட்கும் போதும் தடுமாறுகின்றனர். பாராளுமன்றத்துக்குள் வரையறை இல்லாமல் பொய் சொல்கின்றார்கள். அதற்குக் காரணம் சிறப்புரிமை வழங்கப்பட்டுள்ளமை ஆகும்.

பாராளுமன்றத்தில் சிறப்புரிமை வழங்கப்படுவது மக்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவே தவிர பொய் உரைப்பதற்கு அல்ல. அதனால் நாங்கள் நினைக்கின்றோம் இந்த நடைமுறை மாற்றம் செய்யப்பட வேண்டும். அரசாங்கம் செயல்படாவிட்டாலும் நாங்கள் தனிப்பட்ட முறையில் யோசனை ஒன்றைக் கொண்டு வந்து அதனை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரில் எத்தனை பேர் பொய் சொல்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் எனப் பார்க்கலாம். நாம் உண்மை பேசினால் நமக்கு அந்த உரிமை தேவையில்லையே - எனக்குத் தேவையில்லை. பாராளுமன்றத்திலும் வெளியிலும் செய்ய முடியாததை நான் சொல்ல மாட்டேன். செய்யமுடியாத ஒன்றைச் சொல்வதும் இல்லை. இன்னொருவரைத் தரக்குறைவாகக் கதைக்க மாட்டேன். 225 பேரும் அதனைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனில் நான் கொண்டு வரும் யோசனைக்கு வாக்களிப்பார்கள். தமது பொய்யைக் கொண்டு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள நினைப்பவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள்." - என்றார். (ஐ)

## மணல்...

கொடிகாமம் வீதி வழியாக பருத்தித்துறை நோக்கி மணல் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து குறித்த டிப்பர் வாகனத்தை பொலிஸார் உண்டியல் சந்தியில் வைத்து மறித்தனர். ஆனால், வாகனம் நிற்காது அங்கிருந்து தப்பிச் சென்றது.

அதனைத் துரத்திச் சென்ற பொலிஸார் பொலிகண்டி பகுதியில் வைத்து டிப்பர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதையடுத்து, டிப்பர் வாகனத்தின் சாரதியும் உதவியாளரும் டிப்பரை அங்கேயே கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச் சென்ற வாகன சாரதி பைகள் சிலவற்றை எடுத்துச் சென்றார் என்று பொலிஸார் கூறினர்.

டிப்பர் வாகனத்தை சோதனையிட்ட போது முன்னிருக்கையில் கஞ்சா இருந்ததை தாம் அவதானித்ததாகவும் தப்பியோடியவர் கஞ்சா இருந்த பைகளை எடுத்துக் கொண்டு ஓடியிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் துப்பாக்கிச்சூட்டு காயத்துடன் ஒருவர் சேர்க்கப்பட்டார். இது தொடர்பில் தகவலறிந்த பொலிஸார் அவரை விசாரித்தபோது அவர் டிப்பர் வாகனத்தின் உதவியாளர் என்பது தெரிய வந்தது.

இதையடுத்து, அவரை கைது செய்து பொலிஸ் காவலில் சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்துள்ளனர். இவ்வாறு கைதானவர் 19 வயதுடைய கிளிநொச்சி - தருமபுரத்தை சேர்ந்தவராவார். (ஐ-02-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஏப்ரல் 18 முதல் 27ஆம் நாள்வரை தலதா மாளிகையில் கண்காட்சி

கொழும்பு, மார்ச் 03

கண்டி சிறீ தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ள புத்தரின் புனித பல் நினைவுச் சின்னத்தின் கண்காட்சிக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தக் கண்காட்சி ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 10 நாட்கள் சிறீதலதா மாளிகை வளாகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## போதுமான எரிபொருள் உள்ளது; மக்கள் அச்சமடைய வேண்டாம்!

### பெற்றோலிய கூட்டுத்தாபனம்

கொழும்பு, மார்ச் 03



"எந்தக் காரணத்துக்காகவும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. போதுமானளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை", என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆனந்த ராஜகருண தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகம் தொடர்பில் குறிப்பிடுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் வழமைக்கு மாறாக எரிபொருளை கொள்வனவு செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விநியோகத்தில் வரையறுக்கப்பட்ட நிலையில்தான் எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருக்கும், குறுகிய நேரத்தில் அளவுக்கு அதிகமாக எரிபொருள் நுகரும்போது இயல்பாகவே விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும் இதனை எரிபொருள் தட்டுப்பாடு என்று குறிப்பிட முடியாது.

வெள்ளிக்கிழமை 8,588 மெற்றிக்தொன் டீசல், 7,878 மெற்றிக்தொன் பெற்றோல், 200 மெற்றிக்தொன் சுப்பர் டீசல் 295 மெற்றிக்தொன் 95 ரக பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடப் போவதில்லை என்று குறிப்பிட்டு மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கிய விநியோக சங்கத்தினர் கொலன்னாவை மற்றும் திருகோணமலை பகுதிகளில் இருந்து விநியோகத்துக்காக எரிபொருளை கொள்வனவு செய்துள்ளனர்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும். தற்போது எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளது. போதுமானளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. ஆகவே பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம் - என்றார்.

## மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 03

நுவரெலியா, பதுளை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நாட்டின் பல முக்கிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 03

காட்டு விலங்குகளிடமிருந்து வயலை பாதுகாக்க வைத்த மின்சாரத்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தளை - யட்டவத்தை பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில், 3 பிள்ளைகளின் தந்தையான 42 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# வடக்கில் 3 முதலீட்டு வலயங்கள் இந்த ஆண்டில் நிறுவ நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 03

**வடக்கு மாகாணத்தில் 3 முதலீட்டு வலயங்கள் உட்பட இந்த ஆண்டில் நாடு முழுவதும் ஏழு முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை நிறுவவுள்ளதாக இலங்கை முதலீட்டு சபை அறிவித்துள்ளது.**

இலங்கை முதலீட்டு சபை இந்த ஆண்டில் அதிகளவிலான வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர்களை கவரும் நோக்கில் பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

இதன்படி, 340 கோடி அமெரிக்க டொலர்கள் அளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை இலக்காக கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக முதலீட்டு சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதில், இந்த ஆண்டுக்குள் 180 கோடி டொலர் பெறுமதியான நேரடி மூதலீட்டை பெறமுடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இது தவிர, இந்த ஆண்டில் ஏழு முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் 3 வலயங்களும் கிழக்கு, வடமேல் மாகாணங்களில் ஒவ்வொரு முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், காலி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இரண்டு தொழில் நுட்ப வலயங்கள் அமைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் நடுப்பகுதியில் ஊக்குவிப்பு திட்ட விண்ணப்பங்கள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் டிஜிற்றல் மயமாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது இலங்கையில் முதலீடு செய்வதில் முதலீட்டாளர்கள் மீண்டும் ஆர்வம் காட்டி வருவதாக இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரக்கோன் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வகித்த பதவியின் கௌரவத்துக்காக தென்னக்கோன் சரணடைய வேண்டும்!

### அமைச்சரவை பேச்சாளர் நளிந்த



கொழும்பு, மார்ச் 03

முன்னாள் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாகாமல் வகித்த பதவியின் கௌரவத்துக்காக பொலிஸில் சரணடைய வேண்டும். மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை வெகு விரைவில் நாட்டுக்கு அழைத்து வருவோம் என அமைச்சரவை பேச்சாளரும் சுகாதாரத்துறை அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த காலங்களில் எரிபொருள் விநியோகத்தில் அமுல்படுத்தப்பட்ட தவறான தீர்மானத்தை திருத்துவதற்கு எடுத்த தீர்மானத்துக்கு எதிராகவே எரிபொருள் விநியோகஸ்தர்கள் வெள்ளிக்கிழமை விநியோக நடவடிக்கைகளில் இருந்து விலகினார்கள்.

எரிபொருள் விநியோகத்தின் போது விநியோகஸ்த் தர்களுக்கு நூற்றுக்கு 3 சதவீதமளவில் மேலதிக தொகை வழங்கப்பட்டது. எரிபொருள் விலை அதிகரித்த போதும், குறைவடைந்த போதும் இந்த தொகையை விநியோகஸ்தர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

இவ்வாறு மேலதிக தொகை வழங்கல் முறை கேடானது என்று பலமுறை குறிப்பிடப்பட்ட நிலையில் இந்த 3 சதவீத கொடுக்கலை நிறுத்துவதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே விநியோகஸ்தர்கள் எரிபொருள் விநியோக நடவடிக்கையில் இருந்து விலகினார்கள். ஒருசில ஊடகங்கள் இதனை பெரிதுப்படுத்தி, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற தவறான நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்தின. இதன் பின்னர் பொதுமக்கள் வழமைக்கு மாறாக எரிபொருளை கொள்வனவு செய்தார்கள்.

வழமைக்கு மாறாக இவ்விரு நாட்களில் அதிகளவில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. எரிபொருள் விநியோகஸ்தர்கள் பொதுமக்களை அசௌகரியத்துக் குள்ளாக்குவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

முன்னாள் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால் அவர் தற்போது தலை மறைவாகியுள்ளார். வகித்த பதவிக்கு மரியாதையளித் தாவது அவர் பொலிஸில் சரணடைய வேண்டும்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் பிரதான நபரான அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இராஜதந்திர மட்டத்தில் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். அர்ஜுன மகேந்திரனை பாதுகாத்தவர்கள் இன்று ஏன் அவரை நாட்டுக்கு கொண்டுவரவில்லை என்று கேள்வி கேட்பது வேடிக்கையாகவுள்ளது - என்றார். (ஐ)

## உப்பு விலையை நிலையாக பேணுவதற்கு நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 03

உப்பின் விலையை நிலையாக பேணுவது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபை உப்பு உற்பத்தி நிறுவனங்களை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைமையகத்தில் கடந்த 25ஆம் திகதி இந்த சந்திப்பு நடைபெற்றது.

சந்தையில் விற்கப்படும் உப்பின் விலைகள் தொடர்பில் அதிகார சபை முன்னெடுத்துவரும் கணக்கெடுப்பின்படி, கடந்த காலத்தில் பல்வேறு விலைகளில் உப்பு விற்பனை, பருவகால உப்பு பற்றாக்குறை மற்றும் தொழில்துறை எதிர் கொள்ளும் பிரச்னைகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டன.

அரசாங்கம் மற்றும் முன்னணி உப்பு உற்பத்தியாளர்கள் உட்பட 18 நிறுவனங்களுடன் பங்கேற்ற இந்தக் கலந்துரையாடலில், தற்போதைய சந்தை சூழ்நிலையால் நுகர்வோர் சிரமப்படாமல் இருக்க விலைகளைப் பராமரிப்பதில் அதிக அவதானம் செலுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உப்பு சந்தைக்கு வரவிருப்பதால், இந்த மாத இறுதிக்குள் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த விலையில் விற்கப்படும் என்று உற்பத்தியாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். மேலும், அதுவரை விலை உயர்வு இல்லாமல் விலை நிலையாக இருக்க வேண்டும் என்ற அதிகார சபையின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர். (ஐ)

## மோட்டார் சைக்கிள் விபத்து: மாணவன் பலி; இருவர் காயம்!

கண்டி, மார்ச் 03

3 மாணவர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்ற இருவர் காயமடைந்தனர்.

கண்டி - உடதலவின்ன பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மரணித்த மற்றும் காயமடைந்தவர்கள் 16 வயதினராவர். வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்த மாணவர்கள் இருவரும் கட்டுகஸ்தோட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org